## சாத்தியமற்ற 'ஒரே நாடு - ஒரே தேர்தல்!'

# தளபதியின் கருத்திற்கு வலிமை சேர்ப்போம்! பா.ஜ.க.வின் பித்தலாட்டத்தை முறியடிப்போம்!



ஒரே நாடு ஒரே தேர்தல் திட்ட வடிவிற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி பாராளுமன்றத்தில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா குளிர்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்டது. அறிமுக நிலையிலேயே மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதை அடுத்து மசோதாவை தாக்கல் செய்ய பெரும்பான்மை ஆதரவு இருக்கிறதா என்பதை உறுதி செய்ய ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது. அதன் பிறகு விரிவான விவாதத்திற்காக பார்லிமென்ட் கூட்டுக்குழு பரிசீலனைக்கு தற்சமயம் அனுப்பப்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை நடத்துவதே ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒன்றிய அரசு கடந்த ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் எட்டு பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்தது அந்தக் குழு பரிந்துரைப்படிதான் நாடாளுமன்றத்தில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தால் பொருளாதார ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பலன் கிடைக்கும் என பாஜக கூறுகிறது ஆனால் அதை அவர்கள் விளக்கமாக சொல்ல முடியவில்லை.

இந்த மசோதாவேபல குழப்பங்களுக்கு வழிவகுக்கும் ஜனநாயகத்திற்கு ஆபத்து திமுக தலைவரும் தமிழக முதல்வருமான தளபதி ஸ்டாலின் உட்பட ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் இந்த மசோதாவை எதிர்க்கின்றன. இந்த மசோதாவை தாக்கல் செய்வதற்காக நம்ப முடியாத கட்டுக்கதைகள் எல்லாம் பாஜக அவிழ்த்து விடுகிறது. அதில் ஒரு கதை ஒரே சமயத்தில் மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் தேர்தல் நடத்தினால் செலவுகள் குறையும். என்பது உதாரணமாக 2014 இல் ஒன்றிய தேர்தலுக்கு ஒன்றிய அரசு செலவு செய்த தொகை 4000 கோடி மட்டுமே. இப்போது அந்த செலவு பத்தாயிரம் கோடியாக உயர்ந்து இருக்கிறது.

ஆனால் இந்திய அரசின் வரவு செலவு என்பது ரூபாய் 45 லட்சம் கோடி இதில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் தேர்தலுக்கு ரூபாய் 10000 கோடி என்று கணக்கிட்டுப் பார்த்தால் கூட செலவு சதவீதம் 0.04% மட்டுமே. இவர்கள் அடுத்து சொல்லும் கட்டுக்கதை வருடம் முழுவதும் தேர்தல் நடந்து கொண்டே இருந்தால் தேர்தல் பரப்புரையில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள் இதனால் ஆட்சியில் கவனம் செலுத்த முடியாது என்பது. இது அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட பிரச்சனை எந்த அரசியல் கட்சிகளும் ஒன்றிய அரசிடம் இப்படி ஒரு புகாரே சொல்லவில்லை இவர்களே இவர்கள் வசதிக்கு இன்னொரு பித்தலாட்ட கதை அவிழ்த்து விடுகிறார்கள் .



சட்டத்துறை அமைச்சர்
**எஸ்.ரகுபதி**

பாஜக எப்போதுமே அரசியலமைப்பு சட்டத்தை படித்துப் பார்த்ததே கிடையாது என்பதற்கு இந்த மசோதாவே ஒரு சாட்சி .நமது தேர்தல் முறையை வடிவமைக்கும் போதே நாட்டின் நிர்வாகத்தை ஆட்சி செய்யும் நேரடியாக தேர்ந்தெடுக்கும் அமெரிக்க முறையை பின்பற்றாமல் மக்கள் பிரதிநிதிகள் சேர்ந்து ஆங்கிலேய முறையை நமது சட்ட வடிவமைப்பாளர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

இந்த மூன்று அமைப்புகளும் தத்தமது எல்லைக்குள் சட்டங்களை விதிமுறைகளை உருவாக்கிக் கொள்ளும் இறையாண்மை பெற்றவை இதை நான் சொல்லவில்லை. அரசியல் சட்டம் சொல்கிறது சம்பந்தமான பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம் பல தீர்ப்புகள் மூலம் இதை உறுதி செய்திருக்கின்றன. ஒவ்வொரு அமைப்பும் தங்கள் ஆயுள் முடியும் போது அதற்கான அரசியல் சட்ட அமைப்பான ஒன்றிய மாநில தேர்தல் ஆணையம் மூலம் எப்போது தேவையோ அப்போது தேர்தலில் நடத்திக் கொள்ள வேண்டியதுதானே.

இதுதானே கடந்த 60, 70 ஆண்டுகளாக நடந்து வருகிறது. நாட்டின் வளர்ச்சி செயல்திறன் விரைவாக நடக்க வேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அந்த வளர்ச்சி ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூலம் இருக்க வேண்டும் என்பதைத் தான் திமுக தலைவர் வலியுறுத்துகிறார்.

ஒரே நாடு ஒரே தேர்தலை எதிர்ப்பதற்கான அவரது ஆணித்தரமான வாதம் கூட இதுதான். இந்தியா நிர்வாகம் என்பது அதிகார பரவலாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தேசம், மாநிலம், உள்ளாட்சி அமைப்புகள் என மூன்று அடுக்குகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம்தேதி,73 வது அரசியல் சட்டம் மாற்றம் மூலம் உள்ளாட்சி அமைப்பு அரசமைப்பு சட்டத்தில் இணைக்கப்பட்டு இந்தியா ஒரு மூன்று அடுக்கு நிர்வாக அமைப்பாக மாறியது. இந்த விவரம் எல்லாம் தெரியாமல் ஆட்சி அதிகாரம் என்ற ஒரே நோக்கில் கொண்டுவரப்பட்டது தான் ஒரே நாடு ஒரே தேர்தல் சட்டம் மசோதா.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற ஒன்றிய அரசின் முன்மொழிவு நடைமுறைக்கு சாத்தியமற்றதும் கூட்டாட்சியியலைச்சிதைப்பதுமாகும் எதார்த்தத்துக்கு முரணானது. அந்தந்த மாநிலத்திற்குரிய பிரச்சனைகள் ஆட்சி முன்னுரிமைகள் போன்ற பல காரணங்களால் ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு சரி படாது. இதுபோன்ற திசை திருப்பும் நாடகங்களை கைவிட்டு விட்டு வேலையில்லா திண்டாட்டம் விலைவாசி உயர்வு, மாநிலங்களுக்கு வளங்களை சமமாக பகிர்ந்து அளித்தல் போன்ற ஆக்கப்பூர்வமான விஷயங்களில் ஒன்றிய அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கி இருக்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள். ஒரே நாடு ஒரே தேர்தல் பற்றி ஒன்றிய தேர்தல் ஆணையத்தின் முன்னாள் தலைவர் எஸ் ஒய் குரேஷி சொன்ன கருத்து கவனிக்கப்பட வேண்டியது.

2014 ஆம் ஆண்டு மோடி பேசும்போது இந்த திட்டத்திற்கு ஒருமித்த ஆதரவு கிடைக்கும் என்றார். ஆனால் இன்று மிகப்பெரிய விவாதத்தை இந்த மசோதா கிளப்பி ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதால் தார்மிக ரீதியாக இதனை கைவிட வேண்டும். ஒரே தேர்தல் என்று கூறிவிட்டு பஞ்சாயத்து தேர்தல்களை 100 நாள் கழித்து நடத்துவதும் ஆட்சிகள் கவிழ்ந்தால்இடையில் தேர்தல் நடத்தப்படும் சூழல் இருப்பதால் இது எப்படி நடைமுறை சாத்தியமாகும் என்று கேட்கிறார் பல்வேறு மதங்கள் இனங்கள் மொழிகள் கலாச்சாரங்களால் சூழப்பட்ட இந்தியாவை ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம் நாட்டின் ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்க ஒன்றிய பாஜக அரசு முயற்சி செய்கிறது இதை ஒருபோதும் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

வருங்காலங்களில் பாரதிய ஜனதா நிறைய தோல்விகளை சந்திக்கும் அதற்காக மக்களின் கவனத்தை திசை திருப்பவே ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை செயல்படுத்த முயற்சிக்கிறது. இது பாஜகவின் கூட்டணி கட்சிகளே ஆதரிக்குமா என்பது சந்தேகம் தான். இதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் அப்படி திருத்தம் கொண்டு வந்தால் மக்களவையில் அதற்கு ஒப்புதல் கிடைக்குமா என்பது சந்தேகம் தான்.

அதே மீறினாலும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரும் பட்சத்தில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை உச்சநீதிமன்ற நிச்சயம் நிராகரிக்கும். இப்படி எந்த சூழ்நிலையிலும் இதை நிறைவேற்ற முடியாது என தெரிந்து கொண்டு பாரதிய ஜனதா இந்த மசோதாவை மக்களவையில் கொண்டு வந்தது ஒரு ஏமாற்று வேலை பித்தலாட்டம் என்பது தான் உண்மை.

அதனால்தான் திமுக உள்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் இதை கடுமையாக எதிர்க்கின்றன ஒரு வாதத்திற்கு இதை பாரதிய ஜனதா சரி என்று சொன்னாலும் ஒரே நேரத்தில் இந்தியா முழுவதும் 28 மாநிலங்கள் 8 யூனியன் பிரதேசங்கள் இவற்றிற்கு தேர்தல் நடந்தால் பாரதிய ஜனதா என்ன மாதிரி வாக்குறுதிகளை தரும் அதற்குத் தெரிந்ததெல்லாம் ஜெய் ஸ்ரீ ராம் அல்லது ஜெய் ஜெகன்நாத் அவ்வளவுதான்.

ஆனால் தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் இந்தியாவின் இறையாண்மைக்கு உத்தரவாதம், மாநில உரிமை, மொழி சுதந்திரம் என்று மக்கள் பிரச்சினைகளை குறிப்பிடும் "மக்கள் பிரச்சனையை பேசும்" சட்டமன்றத் தேர்தலின் போது மாநிலத்துக்கான என்னென்ன திட்டங்கள் மக்களை அது சென்றடைவதற்கான வழி இவற்றை திட்டமிட்டு தேர்தல் அறிக்கையாக வெளியிடும் பிரச்சாரமும் செய்யும் ஏனென்றால் தி.மு.க. மக்களுக்கு என்ன செய்யலாம் என்று சிந்திக்க கூடிய சமூக நீதி அடிப்படையான ஒரு கட்சி. பா,ஜ,க,வுக்கு இதில் எல்லாம் எந்த அக்கறையோ கரிசனமோ இல்லை. அதற்காகத்தான் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆட்சி செய்வதற்காக கொண்டு வரப்பட்டது தான் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா நாடாளுமன்றத்திற்கும் சட்டசபைக்கும் உள்ளாட்சிக்கும் தனித்தனியாக தேர்தல் நடக்கும்போது தான் மக்களுக்கும் ஒரு புரிதல் இருக்கும். அரசியல் கட்சிகளும் தங்கள் செய்ய இருப்பதை பட்டியல் போட்டு பிரச்சாரம் செய்யும். இதுவரை இப்படித்தான் நடந்து வருகின்றது. தேர்தல் செலவு தேர்தலுக்கான நேரம் விரையம் என்ற பார்வையே பா.ஜ.க.வின் பித்தலாட்டத்திற்கான திட்டம் என்பதை சொல்லாமல் சொல்கிறது,

1952-ல் இந்திய குடியரசாக அறிவிக்கப்பட்ட போது முதலாவது மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடந்தது. இது தான் ஒரே நாடு ஒரே தேர்தல். ஆனால் அடுத்த பத்தாண்டுகளுக்குள்ளேயே பல்வேறு மாநிலங்களுக்கும் ஒன்றியத்திற்கும் வெவ்வெறு ஆண்டுகள் தேர்தல் நடத்தும் சூழல் வந்து விட்டதால் ஒரே நாடு ஒரே தேர்தல் முறை பலனிக்காமல் போய்விட்டது.

அதே சூழல் தான் தற்போதும் ஏற்படும். எனவே, எந்த மாநிலமும் மத்தியில் ஒன்றியமும் தங்கள் ஆட்சியின் ஆயுள் காலத்தை குறைத்துக்கொள்ள சம்மதிக்க மாட்டார்கள். எனவே, ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது இந்திய திருநாட்டை பொறுத்தவரைக்கும் சாத்தியமில்லாத ஒன்றாகும்.



சென்னை – கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் – பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கத்தை துவக்கி வைத்தார். இதில் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## புதிதாக தேர்வான சங்க நிர்வாகிகளுக்கு வாழ்த்துகள்!

# நம் மாணவர்களுக்கு மேலும் சிறப்பான கல்வியை கற்றுத் தருவோம்!

### சென்னையில் – தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கத்தை துவக்கி வைத்து – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

*சென்னை, ஜன. 1 -*

*சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கத்தை துவக்கி வைத்தார். இவ்விழாவில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:*

*முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் ஆகியோரின் சார்பில் தனியார் பள்ளிகள் சங்கத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*"கல்வியில் சிறந்த தமிழ் நாடு என்பது வெறும் அரசு பள்ளிகளால் மட்டுமல்ல தனியார் பள்ளிகளின் பங்களிப்பும் உள்ளது. சங்கம் நடத்துவது மிகவும் சாதாரண காரியம் அல்ல, மாணவர்களின் நலனுக்காக, அவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தனியார் பள்ளி நிர்வாகத்துடன் அரசு உள்ளது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். தனியார் பள்ளிகள் சங்கம் 9 வகையான கோரிக்கைகளை அளித்துள்ளது அதனை முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**தனியார் பள்ளிகளின் பங்களிப்பு!**

*தனியார் பள்ளிகள் புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் சமுதாயத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையோடு மிகப் பெரிய பணியைச் செய்து வருகிறது. தனியார் பள்ளிகளின் பங்கின்றி ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க இயலாது. தனியாரின் பங்கு உலகளவில் ஏதேன்ஸ் நகரிலிருந்து துவங்கி செயல்பட்டு வருகிறது. 500 அரசு பள்ளிகளை தத்தெடுத்து பள்ளிக்குத் தேவையான கட்டமைப்புகளை தனியார் பங்களிப்புடன் நிறைவேற்றித்தர நடவடிக்கை மேற்கொள்வோம் என்ற தீர்மானத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*தமிழ்நாட்டில் உள்ள 1.23 கோடி மாணவர்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். தனியார் பள்ளிகளுக்கு தமிழ்நாடு அரசு அங்கீகாரம் மட்டும் அல்ல தனியார் பள்ளி மாணவர்கள் செய்யும் சாதனைகளையும் அங்கீகரித்து பாராட்டும் அரசாக முதலமைச்சர் அவர்கள் உள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் கழக மாநாடு வருகின்ற பிப்ரவரி மாதத்தில் நடைபெற உள்ளது. உங்களது கோரிக்கைகள் நிறைவேற்றத் தேவையான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒன்றிய அரசு மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்யாமல் உள்ளது.*

**புதிய சங்க நிர்வாகிகளுக்கு வாழ்த்துகள்!**

*தனியார் பள்ளிகள் அரசு பள்ளிக்கு வருகைத் தந்து அரசுப் பள்ளியில் நடைபெறும் கல்வி கற்றல் நிலையைப் பாருங்கள். அரசுப் பள்ளி நிர்வாகம் தனியார் பள்ளிக்கு வருகை தந்து அங்குள்ள கற்றல் திறனைப் பார்வையிடுவார்கள். நாம் கற்றுக்கொண்ட அனைத்தையும் நம் மாணவர்களுக்கு கொண்டு சென்று மேலும் சிறப்பானக் கல்வியைக் கற்றுத் தருவோம். புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள சங்க நிர்வாகிகளுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.*

*இந்நிகழ்ச்சியில், பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் திருமதி.சோ. மதுமதி, தனியார் பள்ளி இயக்குநர் பழனிச்சாமி, தொடக்கப்பள்ளி இயக்குநர் பு.ஆ.நரேஷ், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், தனியார் பள்ளிகள் சங்கம் நிறுவனர் மாநிலத் தலைவர் பி.டி..அரசகுமார், மாநில பொதுச் செயலாளர்கள் டி.சி.இளங்கோவன், கே.ஆர்.நந்தகுமார், மாநில ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம், மாநில சட்ட செயலாளர் ஐ.மனோகரன் ஜெயக்குமார், மாநில பொருளாளர் ஸ்ரீதர் மற்றும் தனியார் பள்ளிகள் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.*

# 'திராவிட மாடல்' ஆட்சியில் விரைந்து கிடைக்கும் நீதி!

### மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் அறிக்கை!

சென்னை, ஜன.1 -

மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் முக.ஸ்டாலின் - ஆட்சிப் பொறுப்பேற்ற பின் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை இரும்புக் கரம் கொண்டு அடக்கிவருவதால் குற்றச்செயல்கள் கடந்த ஆட்சியில் இருந்ததை விட குறைந்து வருகின்றன. அது மட்டுமல்லாது வழக்கு விசாரணையை விரைவாக முடித்து குற்றவாளிகளுக்கு சரியான தண்டனை பெற்றுத்தரும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது திராவிட மாடல் அரசு.

கடந்த 2022-ஆம் ஆண்டு அக்.13-ஆம் தேதி பரங்கிமலை ரயில் நிலையத்தில், ஒருதலைக் காதலை ஏற்க மறுத்த சத்தியப்பிரியா என்ற கல்லூரி மாணவியை மின்சார ரயிலில் தள்ளி விட்டு கொலை செய்த கொலையாளி சதீஸ்க்கு மரண தண்டனை விதித்து சென்னை மகளிர் சிறப்பு நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

2022-ஆம் ஆண்டு அக்டோபரில் இந்த குற்றச்சம்பவம் நடைபெற்ற உடனே விரைவாக குற்றவாளி சதீஸ் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டான். மேலும் முதலமைச்சரின் உத்தரவுப் படி துரிதமாக விசாரணையை மேற்கொண்ட தமிழ்நாட்டின் சி.பி.சி.ஐ.டி. போலீசார் 70 சாட்சிகளை வழக்கில் இணைத்து குற்றவாளிக்கு எதிரான ஆதரங்களையும் உரிய வகையில் திரட்டி நீதிமன்றத்தின் முன் குற்றவாளியை நிறுத்தினர்.



சென்னை மகளிர் சிறப்பு நீதிமன்றத்தில் சாட்சிகள் மற்றும் இதர விசாரணைகள் விரைந்து முடிக்கப்பட்டு இன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றம் நடைபெற்று 25 மாதங்களுக்குள் வழக்கு விசாரணை முடித்து தீர்ப்பே வழங்கப்பட்டுள்ளது. கொலைக் குற்ற வழக்கில் இவ்வளவு விரைவாக நீதி பெற்றுக்கொடுத்து இந்தியாவிற்கே முன்னுதாரணமாக திகழ்கிறது திராவிட மாடல் அரசு.

ஒன்றிய அரசின் சி.பி.ஐ. விசாரணையில் இருக்கும் 2019-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், இன்னும் எந்த ஒரு முடிவும் தெரியாத சூழலில் 2022-ஆம் ஆண்டு நடைபெற்ற கொலை குற்றத்திற்கு இரண்டே ஆண்டில் தண்டனை கிடைக்கும் வண்ணம் செயல்பட்டுள்ளது திராவிட மாடல் அரசு.

திராவிட மாடல் ஆட்சியில் நீதி வழுவாது. நீதி தாமதம் ஆகாது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், புதுமைப்பெண் திட்டத்தில் விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை முகமது சதக் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமையில், பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கினார். இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் அமைச்சர் வ. சத்தியமூர்த்தி மற்றும் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் மற்றும் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம்,துணைத் தலைவர் பிரவீன் தங்கம், ஒன்றிய கவுன்சிலர் வழக்கறிஞர் கே. கதிரவன், கீழக்கரை நகர் மன்றத் தலைவர் ஆபிதா, துணைத் தலைவர் ஹமீதுசுல்தான், திருப்புல்லாணி ஒன்றிய தலைவர் புள்ளாணி உட்பட அரசு அதிகாரிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.